2026 ஜனவரி மாதம் 27- ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

O.S. நெம்பர் : 58/2016

2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27- ஆம் தேதி செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.வா.சா.4-வது நபரின் வாக்குமூலம்

(1969-ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | DW4 – போஜூ |
| தந்தை பெயர்: | சௌரி செட்டியார் |
| ஊர்: | பழனிச்செட்டிபட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | -- |
| வயது : | 76 |

27.01.2026

(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).
சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை-

நான் இந்த வழக்கில் 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு 4 வது சாட்சியாவேன். வழக்கு விபரங்கள் குறித்து நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை 1, 2, 4, 5 தரப்பு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகின்றேன். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். சீனிவாசன் 5 ம் பிரதிவாதியான அவரது பேரனுக்கு 10.10.2012 ம் தேதி எழுதிவைத்த உயில் சாசனமாகும். அதிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். எனது தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>:–

வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 27.01.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.01.27 18:59:22 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
27.01.2026.